# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.164/2023 | Date | : 07.07.2025 |
| Deposition of Witness for | : அ.சா.4 | Taluk | : |
| Name | : சக்திவேல் | Calling | : |
| Father Name | : ஆறுமுகம் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 07.07.2025.

(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், அக்கமாபேட்டையில் வசித்து ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். கடந்த 2022 ம் வருடம், மாதம் ஞாபகமில்லை, 26 ம் தேதி, மாலை சுமார் 05.30 மணியளவில் சங்ககிரி அசோசியேசன் பங்க் அருகே நான் எனது சொந்த வேலையின் காரணமாக சென்றுகொண்டிருந்தபோது, அந்த இடத்தில் நடந்த விபத்து சம்பந்தமாக போலிசார் விசாரித்துகொண்டிருந்தனர்.

2) அப்போது, போலிசார் சம்பவ இடத்தில் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தனர். பார்வை மகஜரில் நானும், எனது நண்பர் தமிழரசன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 1 வது சாட்சி

கையொப்பம் தமிழரசன் என்பவருடையது ஆகும். ( **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை** :-

நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரிதான். அதனால் நான் அடிக்கடி காவல் நிலையம் சென்று வருவேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது எத்தனை நபர்கள் அங்கிருந்தார்கள் என்றால் சுமார் 05 நபர்கள் இருந்தார்கள். அந்த இடத்தில் போலிசாருக்கு நான் பரிட்சையமான நபர் என்பதால் கையொப்பம் கேட்டதற்கு இணங்க நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அதில் என்ன எழுதியிருந்தது என்று போலிசாரும் படித்து காட்டவில்லை, நானும் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான்.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Sakthivel